**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.16.09.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி.பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.4 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 16.09.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | | Tmt.Soniya |
| க/பெ. | | Tr.Prakash |
| வயது | | 36/2025 |

துவக்க நேரம் 12.50 PM

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

1. நான் இவ்வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன். இவ்வழக்கில் தொடர்புடைய கத்தாரிகுப்பம் கிராமம் ச.எண்.114/1 ல் தொடர்புடைய ஆவணங்களை இந்நீதிமன்றம் சமர்ப்பிக்க உத்தரவிட்டது. அதனடிப்படையில், மேற்படி சர்வே எண் தொடர்பான அறிக்கை மற்றும் வருவாய் துறை ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்.

| வ. எண் | ஆவணம் | தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1 | கடந்த 09.12.2016 அன்று வாலாஜா மண்டல துணை வட்டாட்சியர் அவர்கள் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பித்ததற்கான செயல்முறைகள் | சான்றிட்ட நகல் | Ex.X8 |

மேற்கண்ட ஆவணத்தை நீதிமன்ற உத்தரவின்படி சமர்ப்பித்துள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. எந்த கிராம சர்வே எண் தொடர்பான ஆவணங்களை எடுத்துவர சொல்லி உத்தரவிடப்பட்டுள்ளது என்றால், வாலாஜா வட்டம், கத்தாரிகுப்பம் கிராமம் ச.எண்.114/1 என்ற எண்ணிற்கு வருவாய்துறை ஆவணங்கள் எடுத்துவர சொல்லி உத்தரவிடப்பட்டுள்ளது. என் மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ள Ex.X1 முதல் X7 வரையான ஆவணங்களில் ச.எண்.114/1 க்கான வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால், Ex.X1 – பாஸ்கரராவ், தாமோதரராவ் பெயர்களில் உள்ளன, Ex.X2 – வேதாத்திரி மக்கள் பாஸ்கரராவ், தாமோதரராவ் பெயர்களில் உள்ளன, Ex.X3 – வேதாத்திரி மகன் பாஸ்கரன், தாமோதரன் பெயர்களில் உள்ளன, Ex.X4 – வேதாத்திரி பெயரில் உள்ளது, ஆனால் பட்டா.290 ஆனது பட்டா 1115 ஆக மாற்றப்பட்டுள்ளது, Ex.X5 – தாமோதரராவ் என்கிற தாமோதரன் என்பவரின் மகன் வேதாத்திரி பெயரில் உள்ளது, Ex.X6 – வேதாத்திரி பெயரில் உள்ளது, Ex.X7 – ச.எண்.114/1 க்கான புலப்படமாகும்.

2. ஒரு நபரின் பெயரில் இருந்து மற்றொரு நபரின் பெயருக்கு பட்டா மாறும்பொழுது, பழைய பட்டா எண்ணுக்கு பதிலாக புதிய பட்டா எண் வழங்கப்படுமா என்றால், சொத்துரிமை மாற்றம் பெறும் நபருக்கு ஏற்கனவே அந்த கிராமத்தில் வேறொரு பட்டா எண்ணில் சொத்து இருந்தது என்றால், அந்த பட்டா எண்ணோடு எந்த சர்வே எண்ணில் புதிதாக சொத்தை பெறுகிறாரோ அந்த சர்வே எண்ணுக்கான பட்டாவுடன் இணைந்துவிடும்.

ஆனால், ஒரு நபருக்கு அந்த கிராமத்தில் ஏற்கனவே சொத்துக்கள் இல்லாமல் இருந்து புதிதாக சொத்துக்கள் வாங்கினாலோ/பெறப்பட்டலோ அந்த நபர் பெயருக்கு சொத்தின் பழைய பட்டா எண்ணிலிருந்து புதிய பட்டா எண் வழங்கப்படும்.

3. ச.எண்.114/1க்கான பழைய பட்டா எண்.290 நீக்கப்பட்டு வேதாத்திரி பெயரில் பட்டா எண்.1115 வழங்கப்பட்டது என்றால், வருவாய் துறை ஆவணத்தில் அப்படிதான் உள்ளது. என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் Ex.X1 முதல் X7 வரையான ஆவணங்களில் கண்ணன், திருமாறன் என பதிவு உள்ளதா என்றால், அவ்வாறு எந்த பதிவும் இல்லை.

4. பட்டா பெயர் மாற்றம் எந்த ஆவணங்களின் அடிப்படையில் நாங்கள் மேற்கொள்வோம் என்றால், பதிவு பெற்ற ஆவணங்களின் பேரிலும், அதோடு சேர்ந்த வில்லங்க சான்றிதழ், கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்வோம். மேற்கண்ட நடவடிக்கையின் அடிப்படையில்தான் ஒரு நபரின் பெயரிலிருந்து மற்றொரு நபரின் பெயருக்கு பட்டா மாறுதல் செய்வோம் என்றால், ஆமாம்.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 01.25 PM

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.

**OS.NO.253/2020**